நிலமார் பத்தினி குதிமாரு
நின்று நல்லோ பத்தினி அடிக்கிளை
மாடி சுத்தி அன்னக் கொடி
மாரடித்தாள் அங்கு மாரடித்தாள்
கோட்டை சுத்தி பத்தினி
மாரடித்தாள் அங்கு மாரடித்தாள்
கொம்பினையா அன்னக் கொடி விளர் மாது"

வசனம்.
'சண்டாளா! நீ, கான கருவித்து, கண்காணப் பிள்ளையித்து, தேங்கில் மூளையித்து, முத்தமிட பிள்ளையித்து, ஏழு தலமுறைக் கும் எண்ணையிட பிள்ளையித்து, ஐந்து தலமுறைக்கும் அழுங்கியிட பிள்ளையித்து, என்று தெய்வ சபையை நினைத்து, மூன்று கை மண்ணை வாரி தூற்றும் போது, அரண்மனையில் 14. குழந்தைகளும் செல்வமடிந்தது போல் சேரமடிந்து விட்டது. அன்னக்கொடி தாமரை 'உன் வீடு நாசமாக போகட்டும் என்று திரும்பி, 'அப்பா சேவகரே! புறப்படுங்கள் நம் ஊருக்குப் போகலாமென்று, 'அடே கருப்புத் தலயேரி! இங்கு வா,' என்று எல்லோரும் பிள்ளையார் கோவிலுக்கு வந்தார்கள்.

தாமரை. 'அடே, தலயேரி! ஊருக்குள் இருக்கும் குழந்தைகளை எல்லாம் கூப்பிடு.'
தலயேரி சென்று குழந்தைகளை கூட்டி வந்தான்.

தாமரை. 'சேவகரே! நம் பெட்டியிலிருக்கும் ஆபரணம், துணிபண்டங்கள், இவைகளை எடுத்து சூறையிடுங்கள்; அவரவர் கைக்கு கிடைத்ததை குழந்தைகள் எடுக்கப் போகட்டும்.'

சேவகர் அப்படியே வெட்டிச் சாமானம் பூரா
வும் எடுத்து சூறையிட்டார்கள்.

தாமரை. 'அடே, துலையேறி! கொத்தர்களைப்போய் சீக்கிரம்
கூட்டி வா. துலையேறி சென்று கொத்தனை கூட்
டி வந்தான். கொத்தன் வந்து தாமரையை நம
ஸ்க்காரம் செய்தான்.

தாமரை. 'அப்பா! மங்களம், உண்டாகட்டும்! கொத்தர்க
ளே! இரண்டடி அகலத்தில், நான்கு அடி நீளத்
தில், இரண்டு கல் அடியுங்கள்.'

கொத். 'ஆத்தா! அப்படியே, செய்து விட்டோம்.'

தாமரை. 'சரி! கோவிலின் தென்புறம், ஒரு கல்லை கீழே
போட்டு, ஒரு கல்லை மேலே எடுத்து நிறுத்
துங்கள் என்று, தாமரை மாயவனை நினைத்
து, நான் தெய்வ சிருஷ்டியில் பிறந்தது
மெய்யானால், கல்லுடன், கல் ஒட்டி அப்படி
யே நிற்க வேண்டும் காந்தி நாதா! என்று
மாயவனை நினைக்கும் போது, கல் அப்படி
யே ஒட்டி நின்றது. பின் தாமரை கொத்
தர்களே! உங்களுக்கு எழுதத் தெரியுமா?'

கொத். 'ஆத்தா! தெரியுமுங்கோ.'

தாமரை. 'சரி! எழுது, வாளவந்தி நாட்டில், மாக்கொ
ழுந்தாக் கவுண்டன், சிவக்கொழுந்தாக் கவுண்
டன், இவர்கள் வீட்டில், 56 தேசத்து அரச
ர்களும், கிராமத்துக் கவுண்டர்களும் தண்ணீ
ர் குடிக்கக்கூடாது, கல்யாணம் செய்யவோ,
கொடுக்கவோ கூடாது. பின் தாமரை —
'அப்பா கொத்தர்களே! நான் சொன்னபடி
எழுதி விட்டீர்களா?'

கொத். 'ஆத்தா! எழுதி விட்டோம்.'

தாமரை. 'சரி! நீங்கள், வீட்டுக்குப் போங்கள்' என்று
சொல்லிவிட்டு. யாராகிலும் கல்லை உடைத்து
விடுவார்கள் என்று, தெய்வசபையிலிருந்
து கதண்டுகளையும், வண்டுகளையும், வரவழை
த்து காவல் வைத்துவிட்டு, அக்கினிச்செ
ண்ணையும் தெய்வசபைக்கு அனுப்பிவிட்
டு 'அப்பா சேவகரே! புறப்படுங்கள் போக
லாமென்று, சிறிது தூரம் சென்றபின்,
~~தாமரை~~ 'அப்பா சேவகரே!' ~~[illegible]~~ நாம், இவ்வளவு
தூரம் வந்து, எங்கள் குலதெய்வமாகி
ய காளியாத்தாளை பார்க்காமல் போகக்கூ
டாது; சற்று நேரம் இருங்கள் சீக்கிரம்
பார்த்து வருகிறேன் என்று, கோவிலுக்கு
போகும் போது, கதவு சாத்தியிருந்தது. கண்டு
காளியாத்தா! பிறந்தவன் வீட்டுக்கு வந்து
அடிதின்று போகிறேன் என்று, கதவை
சாத்தி படுத்துக் கொண்டாயா? சண்டாளி!
என்று கோபத்துடன், கதவை எட்டி
உதைத்தும் கதவு தாளாகியிருந்தது.
அப்போது, காளியாத்தா பயந்து, முக்கா
ட்டை போட்டு ஒரு மூலையில் போய்
படுத்துக் கொண்டாள். தாமரை உள்ளே
சென்று, 'காளியாத்தா! நான் உதைதின்று
வந்துவிட்டேன் என்று, மூலையில் போய்
படுத்துக் கொண்டாய்?
காளியாத். 'தாமரை! நீ, ஊரிலிருந்து வந்ததே எனக்
குத் தெரியாது; நீ இப்போது வரத்தான்
எனக்குத் தெரியும். உன்னை அடித்து விட்டானா? சண்டாளன்!' என்று
காளியாத்தா துயரப்பட்டாள்.

தாமரை. (மேல் துயிலை விலக்கி) காளியாத்தா! என், உடலைப் பார்' என்றதும், காளியத்தா பார்க்கும் போது ரத்தமயமாக இருந்தது.

காளி. 'ஆகா சண்டாளன்! இப்படி செய்துவிட்டானே!' என்று இருவரும் அழுது கொண்டு இருக்கும்போது, காளியாத்தாளுக்கு பூஜை செய்யும் பிராமணர் வந்தார்; வந்து பார்க்கும் போது முன் கதவு உடைந்து கிடந்தது.

பிராமணர். 'ஐயோ! என்ன அநியாயம், கதவெல்லாம் உடைந்து கிடக்குதே' என்று அருகில் வரும் போது, உள்ளே அழும் குரல் கேட்டது. ஐயர் உள்ளே சென்று ~~[illegible]~~ தாமரையாளைப் பார்த்து, 'அம்மா! நீங்கள், எந்த ஊர்?' என்று கேட்டார்.

தாமரை. 'ஐயரே! நான் பொன்னிவள நாடு, உங்கள் அரசருடைய தங்கை தாமரையாக்கவுண்டிச்சி நான் தான்; பிறந்தவன், வீட்டுக்கு வந்து, சண்டாளன் என்னை அள்ளி விட்டு அடித்து அநியாயம் செய்து விட்டான்; என் தேகத்தைப் பாருங்கள். ஐயர் தாமரையின் தேகத்தைப் பார்த்து, 'சண்டாளன் பத்தினியாளை இந்த மாதிரி அடித்து விட்டானே, அவர்களுக்கு என்ன கதி நேர்ந்ததோ தெரியவில்லை' என்று, மனதில் நினைத்து அழுது வைத்து விட்டு, 'ஆத்தா! இருங்கள் சூடத்தை எடுக்க மறந்து வந்து விட்டேன், சீக்கிரம் எடுத்து வருகிறேன்' என்று -

புறப்பட்டு அரண்மனையை நோக்கிச் சென்றார். ஐயர் அரண்மனை போய் பார்க்கும் போது, நாலும் பக்க கேட்டும் பூட்டிக் கிடந்தது, முன் பக்கம் கதவு மட்டும், உள்ளே தாளிடப்பட்டிருந்தது, எல்லோரும் உள்ளே இருப்பார்கள் என்று கதவைத் தட்டிக் கூப்பிட்டார்.

உள்ளே கதவு தட்டும் சத்தம் கேட்டு அரசர் 'அடி மாதர்களே! கோவில் ஐயர், கூப்பிடுவார் போல் தெரிகிறது, போய் கதவைத் திறந்து விடுங்கள்' என்றார். மாதர்கள் ஓடி கதவைத் திறந்ததும், ஐயர் 'மாதர்களே! அரசர்கள் எங்கே?'

மாதர்: 'சுவாமி! அரண்மனையில் தான் இருக்கின்றார்கள்.'

ஐயர்: 'சரி! நான் வந்திருப்பதாகச் சொல்லி, வரும்படி சொல்.'

மாதர் சென்று அரசரிடம் சொன்னதும் அரசர்கள் வந்தார்கள்.

ஐயர்: 'ராஜாவே! ஏன் அரண்மனையை தாளிட்டு உள்ளே இருந்தீர்களே? என்ன விபரம்?'

அரசர்: 'ஐயரே! பொன்னி வள நாட்டிலிருந்து, என் தங்கை தாமரையாள் வருகிறாள் என்று, அவள் குழந்தை யில்லாமல் வறடியாக இருப்பதால், அவள் வந்து குழந்தைகளைப் பார்த்தால், வாய்ப்புண் தாங்கு மென்று, அவளை உள்ளே விடாமல் அரண்மனையின் நால் பக்கமும் காவல் போட்டு, நாங்கள் கதவைத் தாள் போட்டு உள்ளே இருந்தோம், தாமரை, அரண்மனைக்கு வந்ததும், வராததும் எங்களுக்குத் தெரியவில்லை.'

ஐயர்: 'அரசர்களே! உங்களைப் போல் புத்திசாலி உலகத்தில் யாருமில்லை, என்ன காரியம்

செய்தீர்கள்? உலகத்தில் எத்தனையோ வடிகள் இருக்கிறார்கள், அதனால், ~~வடி எதிர் வந்தால்~~ வரடி எதிர் வந்தால், வரம்புணி தாங்குமா? அரசே! குழந்தைகள், எங்கே?

அரசர். ஐயரே! குழந்தைகளை, அவள் வந்து பார்த்து விடுவாள் என்று, மக்கிரியைப்போட்டு மூடி வைத்திருக்கிறோம்.

ஐயர். அரசர்களே! மக்கிரியைத்திறவுங்கள், பார்க்கலாம். மக்கிரியைத்திறந்து பார்க்கும் போது, 14 குழந்தைகளும், செல்லுமடிந்தது போல் செத்துமடிந்து கிடந்தது. அதைப்பார்த்த ஐயர், அரசர்களே! விதியை, விலக்கு வாங்கிக் கொண்டீர்களே? 14 குழந்தைகளும் இறந்து கிடக்குதே, என்ன செய்வது? அரசர்களே!

ஐயர். பாட்டு

"நீ ஆளைவிட்டு பத்தினியை அடித்தாயடா
இங்கு அடித்தாயடா
அநியாயம் நாட்டிலே
செய்து விட்டாய் அங்கு செய்துவிட்டாய்"

அட சண்டாளா! தாமரையை இந்த மாதிரி அடித்து, அவள் கோட்டையை சுற்றி மாரடித்து, காளியாத்தா கோவில் சென்று முறையிட்டுக் கொண்டு இருக்கிறாள்.

அரசர். ஐயரே! எங்கள், 14 குழந்தைகளும் இறந்து விட்டதே, என்ன செய்வது?

ஐயர். அரசர்களே! தாமரையின் சாபத்தில்தான் குழந்தைகள் இறந்து விட்டது, அவள் வந்தால் தான், குழந்தையை எழுப்ப

~~ஐயர்~~ நான் ஒரு தந்திரம் சொல்கிறேன் கேளுங்கள், நீங்கள் இருவரும், வேட்டைக்குப்போய் வந்தது போல் குதிரையின் மேல் ஏறிவந்து, கோவிலில் வந்து இறங்கி, தாமரையின் காலில் விழுந்து கொள்ளுங்கள், வாயைத் திறந்து ஒன்றும் பேசிவிடாதீர்கள், நான் இங்கு வந்ததாக, தாமரைக்குத் தெரியக்கூடாது' என்று, ஐயர் புறப்பட்டு கோவில் போய் சேர்ந்தார். ஐயர் போனதும், அரசர் இருவரும் குதிரை மேல் ஏறி, வேட்டைக்குப்போய் வருவது போல் வந்து, கோவிலில் இறங்கி தாமரையின் பாதத்தின் அருகில், மண்டியிட்டு உட்கார்ந்து பேசாமல் இருந்தார்கள். இதை தாமரை கவனிக்கவில்லை. இப்படியிருக்கும் போது, ஐயர் காளியாத்தாளுக்கு, அருபூஜை, குரு பூஜை, 58. லிங்க பூஜையும் முடித்து, தாமரைக்கு தீர்த்தம் கொடுத்து விட்டு, தாமரையின் காதில் விழும்படி, 'இந்த அரசர்கள், இங்கு வந்து எதற்கு மண்டியிட்டு விழுந்து கிடக்கிறார்கள்' என்று பேசிக்கொண்டே, தீர்த்தத் தட்டைக் கொண்டு உள்ளே சென்றார். இதைக் காதில் கேட்ட தாமரை, 'ஐயரே! யார் வந்திருக்கிறார்கள்? உங்க பாட்டிஸ்துணியாக பேசிக்கொண்டு போகிறீர்கள்?'

ஐயர். 'அந்தா! உங்கள், அண்ணமார்கள் இரண்டு பேரும் வந்து விழுந்து ~~வந்து~~ பாதத்தில், கிடக்கிறார்கள், திரும்பி கீழே பாருங்கள்.'

தாமரை. 'சண்டாளர்கள்! இங்கு, எதற்கு வந்தார்கள்? நான், இங்கு இருப்பதாக, யார் சொன்னது?

~~[illegible]~~. ஐயரே/நீங்கள்தான் போய்ச் சொல்லியிருப்பீர்கள்; என்னை ஆனாவிட்டு அடித்த பிறகு, என் ஆயுள் உள்ளவரை, அவர்கள்முகத்தில் விழிக்க மாண்டேன்.'

காளியா. 'அம்மா, தாமரை! உன், அண்ணன்மார்கள் செய்த குற்றத்தை மன்னித்து, நீ இவ்வளவு தூரம் வந்து, பிறந்த வீட்டைப் பார்க்காமல் போகக்கூடாது, நீபோய் அரண்மனையை பார்த்து விட்டு போம்மா.'

தாமரை. 'அத்தா/உனக்காக நான் போகிறேன், ஐயரே/ அவர்கள்முகத்தில் நான் விழிக்க மாண்டேன்; எழுந்து ஓடிப் போகச் சொல்லுங்கள்,' என்றதும். ஐயர், அரசர்களை நோக்கி, 'அரசர்களே! எழுந்து ஓடி விடுங்கள், இங்கு நிற்காதீர்கள் என்றதும், அரசர்கள். சென்று ~~[illegible]~~ விட்டார்கள். பிறகு, ஐயர் தாமரையைக் கூட்டிக்கொண்டு அரண்மனைக்குச் சென்றார். இருவரும் அரண்மனையை சுற்றிப் பார்த்துக்கொண்டு ரேணிபட்டசாலைக்கு வரும்போது, 14 குழந்தைகளும் துணியைப் போட்டு மூடியிருந்தது.

தாமரை. 'ஐயரே! இது என்ன, துணியைப்போட்டு மூடியிருக்கிறது?

ஐயர். 'அத்தா/நீங்கள், தெய்வசபையை நினைத்து சாபம் விடும்போது, 14 குழந்தைகளும் செல்லுமடிந்ததுபோல் சேரமடிந்து விட்டது,' என்றதும், தாமரைக்கு கோபம் வந்து, ஏது, ஐயரே/அதிகப்பிரசங்கம் பேசுகிறீர்? நானா சாபம் விட்டு குழந்தையைக் கொன்றேன்? காலம் முடிவாகி இறந்து விட்டது;

அதற்கு, நான் என்ன செய்வது.'

ஐயர். 'ஆத்தா! தாங்கள் தான், இந்தக் குழந்தையை எழுப்பித்தர வேண்டும்.'

தாமரை. 'ஐயரே! என்ன விளையாடுகிறீர்! நான் ஈஷ்வரனா? குழந்தைகளை எழுப்புவதற்கு?'

ஐயர். 'ஆத்தா! நீங்கள், ஈஷ்வரன் சிருஷ்டியில் பிறந்தவர்கள், தாங்கள் மனம் வைத்தால் எழுப்ப முடியும்.'

தாமரை. 'சரி! அப்படி நான் எழுப்பி விட்டால், என்னுடைய உரிமைப்பெண்ணை இப்போதே எனக்குக் கொடுக்க வேண்டும்?

ஐயர். 'ஆத்தா! தங்கள் இஷ்டம் போல், பெண்ணை இப்போதே கூட்டிச் செல்லுங்கள்.'

தாமரை சரி என்று, கெங்கை சென்று நீராடி ஜலத்தில் பார்சமாக மண்டியிட்டு உட்கார்ந்து, தெய்வசபையை நினைத்து, 'மண் பிடித்து போட்ட மாயவனே! உருப்பிடித்துப் போட்ட உடையாளி! நான் தெய்வசபையில் பிறந்தது மெய்யானால் —

செய்பூசி, செஞ்சாடு, சேர வரம் தர வேண்டும் பொன்பூசி பொன்சரடு, பொருந்த வரம் தரவேண்டும், தங்களுட புண்ணியத்தில் குழந்தைகளை எழுப்ப எனக்கு அருள் புரிய வேண்டும், காஞ்சி நாதா! என்று, தாமரை மாயவனை நினைக்கும் போது, மாயவர் தெய்வசபை சென்று, பொன் பிரம்பை எடுத்து பூலோகத்திற்கு விடுத்தார். பொன்பிரம்பு வாளவந்திராடு நோக்கிப் புறப்பட்டது —

பாட்டு,,

"தெய்வ சபை விட்டுமங்கே விட்டுமங்கே
பூலோகம் வருகுதுபார் பொன்பிரம்பு
ஆயருட கிருபையாலே கிருபையாலே
அத்தினமே வருகுதுபார் பொன்பிரம்பு
வளநாடு நாடுதேடி நாடுதேடி
வருகுதுபார் சாமியுட பொன்பிரம்பு"

தாமரை பொன்பிரம்பு வருவதைப்பார்த்து, இரண்டு கையையும் ஏந்தி, பிரம்பை பிடித்து ஒரு சொம்பு தண்ணீர் எடுத்துக்கொண்டு அரண்மனை வந்து, சொம்பில் கொண்டு வந்த தண்ணீரை குழந்தைகளின் மேல் தெளித்து, மாயவனை நினைத்து, பொன்பிரம்பில் தட்டினாள். குழந்தைகள், தூங்கி எழுவது போல், 14. குழந்தைக்கும் உயிர் வந்தது, குழந்தைகள் எழுந்து கண்ணைத் துடைத்துக்கொண்டு, தாமரையைக் கண்டு 'அத்தை கும்பிடு வாங்கிக்கொள்ளுங்கள் என்று, 14. குழந்தைகளும் கும்பிட்டது. பின், தாமரை, மரிக்கொழுந்தாக் கவுண்டர் மகள் வள்ளியாத்தாளையும், சிவக்கொழுந்தாக் கவுண்டர் மகள் பொன்னாத்தாளையும்,

பாட்டு,,

"எட்டி நல்லோ பத்தினி மயிர் பிடித்து
இழுக்கிறாளே தாமரை இரண்டு பெண்ணை
தாவி நல்லோ தாமரை மயிர் பிடித்து
துணிச்சு இழுத்தாள் பத்தினி இரண்டு பேரை"

ஐயர். 'அத்தா, தாமரை! இப்போதே, ஏன் குழந்தைகளைப் பிடித்து இழுக்கிறீர்கள்.'

தாமரை. 'அடே, பாப்பானே! முன், நீ, என்ன சொன்னாய்? இப்போது என்ன சொல்கிறாய்? இனி ஏதாவது பேசினால், உன் உயிர் எமலோகம் போய் விடும் ஜாக்கிரதை.'

ஐயர். 'ஆத்தா! கோபப்படாதீர்கள், நான் எதற்கு சொல்கிறேன் என்றால், தங்கள் மைந்தர்கள் வந்த காலத்தில் கூட்டிப்போகலாமென்று சொன்னேன், சரி, உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள் என்றதும், தாமரை இரண்டு பெண்ணையும் பிடித்து இழுத்துக்கொண்டு வெளியில் வரும் போது, தலையாரி வாசலில் நின்று கொண்டிருந்தான். அவனையும் கூட்டிக்கொண்டு பிள்ளையார் கோவிலுக்கு போய் அடே தலையாரி! சீக்கிரம் போய் கொத்தர்களைக் கூட்டிக்கொண்டு வா. தலையாரி நல்லது என்று, கொத்தர்களைப் போய்க் கூட்டி வந்தான். கொத்தர்கள் வந்து, தாமரையைக் கண்டு நமஸ்காரம் செய்தார்கள்.

தாமரை. 'அப்பா; கொத்தர்களே! முன் அடித்து வைத்த கல்லு எடுத்து, அப்படியே குப்புறப் போடுங்கள்.'

கொத். 'ஆத்தா! அப்படியே, போட்டு விட்டோம்.'

தாமரை. 'சரி, கொத்தர்களே! நீங்கள் போங்கள் என்று சொல்லி விட்டு, இரண்டு பெண்களையும் கல்லின்மேல் நிறுத்தி தெய்வ சபையை நினைத்து, மாயவரை நினைத்து, 'நான் தெய்வசபையில் பிறந்தது உண்மையானால், இந்தப் பெண் இரண்டும், கல் சிலையாக மாற வேண்டும் காஞ்சிநாதா! நான் தேடும் மைந்தன் வந்த காலத்தில், எனக்கு, தாங்கள் இதே பிள்ளையார் கோவிலில் வைத்து திருமணம் செய்து வைத்தீர்கள்; அது போல், என் மைந்தர் வந்த காலத்தில், இதே, பிள்ளையார் கோவிலில் வைத்து, திருமணம் செய்து கூட்டிப்போகிறேன்; அதுவரை இந்தப் பெண்கள், கல், சிலையாக அப்படியே நிற்கவேண்டும் காஞ்சி நாதா' என்று தாமரை மாயவரை நினைக்கும் போது, பெண்கள் இரண்டும் கல் சிலையாக மாறியது. முன் போல்;

கதுண்டுகளையும், வண்டுகளையும், பெண்கள் இலக்குக் காவல் வைத்துவிட்டு, சேவகரைக் கூட்டிக்கொண்டு பொன்னிவள நாட்டுக்கு புறப்பட்டார்கள்.

பாட்டு,,

"வாளவந்தி நாடுவிட்டு நாடுவிட்டு
பொன்னிவள நாடு வாரார் நாடு வாரார்
சேவகரைப் பின் நடத்தி பின் நடத்தி
அருங்கிளியாள் முன்தொடர்ந்தாள் முன்தொடர்ந்தாள்"

தாமரையும், சேவகர்களும், பொன்னிவள நாடு வந்து சேர்ந்தார்கள்.

தாமரை: 'சேவகர்களே! அங்கு நடந்த சமாச்சாரங்களை, இங்கு யாரிடமும் சொல்ல வேண்டாம்.'

சேவகர்: 'ஆத்தா! நல்லது,' என்று எல்லோரும் அரண்மனை வந்து சேர்ந்தார்கள். தாமரை அரண்மனை வந்ததும், மாதர்களை நோக்கி 'அரசர், எங்கே?' என்று கேட்டாள்.

மாதர்: 'ஆத்தா! இப்போதுதான், சாப்பிட்டு விட்டு, அரசர், பஞ்சணைக்கு படுக்கச் சென்று விட்டார்.'

தாமரை: 'சரி! எனக்கு நடந்து வந்து கொஞ்சம் களைப்பாய் இருக்கிறது, கொஞ்ச நேரம் படுத்திருந்து, அதன்மேல் அரசரைப் போய்ப் பார்க்கலாம்' என்று, ரேணிப்பட்டகசாலை சென்று, போர்வையை போர்த்திப் படுத்துக்கொண்டாள். தாமரைபோய் படுத்து சிறிது நேரம் கழித்து, குன்றுடையா ராஜா நித்திரை முடிந்து, எழுந்து வந்து

'அடி, குப்பி! தாமரை வந்து விட்டாளா? இன்னும், இல்லையா?'

மாதர்கள்: 'சாமி! வந்து விட்டார்கள், நடந்து வந்து களைப்பாய் இருக்கிறது என்று, ரேணிப்பட்டகசாலையில் படுத்திருக்கிறார்கள்.'

குன்னையா சாமி, சரியென்று, மேணிப்பட்டகசாலைக்கு சென்று பார்க்கும்போது, தாமரை உடம்பு தெரியாமல் போர்த்திப்படுத்திருந்தாள்.

கு.ராஜ. 'பெண்ணே, தாமரை! ஏன் போர்த்திப் படுத்துக் கொண்டாய்?'

தாமரை. 'நாதா! நடந்து வந்ததால் களைப்பாய் இருக்கிறது, சிறிது நேரம் படுத்திருந்து அதன் மேல் வந்து தங்களைப் பார்க்கலாமென்று வந்து படுத்துக் கொண்டேன்.'

கு.ராஜன். 'பெண்ணே! நீ பிறந்தவன் வீட்டுக்குச் சென்றதற்கு, உபசரணை இல்லாமல் அபசரணை நடந்திருக்கும் போல் தெரிகிறது, அதனால் தான், வந்ததும் என்னிடம் கூட வராமல் படுத்துக்கொண்டாய், அதனால், எனக்கு சந்தேகமாய் இருக்கிறது, மேல் சீலையை எடு பார்க்கலாம்?'

தாமரை. 'நாதா! வெய்யலில் அதிகம் நடந்ததினால், உடம்பெல்லாம் வெய்யகொப்பளம் இருக்கிறது, மேல் சீலையை எடுத்தால், நீர் வடியும் நாதா!'

கு.ராஜன். பெண்ணே! உன் தந்திரம் எனக்குத் தெரியும், அதையெல்லாம் என்னிடம் சொல்ல வேண்டாம்! என்று, அருகில் சென்று மேல் சீலையை எடுத்துப்பார்த்தார், பார்க்கும்போது, சாட்டைத்துளிர் பட்டு சரீரமே ரத்தமயமாக இருந்தது. 'அடி சண்டாளி! சதிகாரி! என் பேச்சைக் கேளாமல், நீ பிறந்தவன் வீட்டுக்குப்போய், இப்படி அவமானப்பட்டு வந்தாயே! எனக்கும் கெட்டபெயர் உண்டாக்கிவிட்டாயே? எந்தக்காலத்திலும் எனக்கு இந்தப் பெயர் மறையாது, இனி, என் முகத்தில் நீ, விழிக்கக்கூடாது, ஒரு நிமிடம் அரண்மனையிலும் இருக்கக்கூடாது, ஓடிப்போய்விடு! என்று, சொல்லி விட்டு கோபத்துடன் பஞ்சணைக்கு

சென்று விட்டார்.

குன்னுடையாசாமி சென்றபின் தாமரை நம் உயிரை இனி வைத்திருக்கக்கூடாது என்று நினைத்து, சேவகனைக் கூப்பிட்டு, தங்கவள நாடு சென்று கொத்தர்களை கூட்டி வர என்றாள். சேவகர் அப்படியே நல்லது என்று புறப்பட்டார்கள்.

பாட்டு,,

"அப்படியே என்சாமி நல்லதென்று
அன்புடனே சேவகர் போகிறாரே.
பாரிவில்லு என்றந்த சேவகனும்
வெள்ளி வெடி என்சாமி ஆளுகளும்
ஓட்டம் ஓட்டம் பருநடையா
ஒருவிரைவாய் என்சாமி வருகிறாரே"

சேவகர் தங்கவள நாடு வந்து, பிள்ளையார் கோவிலில் நின்று கொத்தர்களை கூப்பிட்டார்கள். கொத்தர்கள் வந்து, என்ன சமாச்சாரம்? என்று கேட்டார்கள்.

சேவகர்: அப்பா, கொத்தர்களே! பொன்னிவள நாட்டில், பெரியவீட்டு ஆத்தா ஆயிரம் வீட்டுக் கொத்தர்களையும் கூட்டிவரச் சொன்னார்கள்.

நல்லது, என்று கொத்தர்கள் ஆயிரம் பேரும் புறப்பட்டு, பொன்னிவள நாடு வந்து தாமரையைக் கண்டு நமஸ்காரம் செய்தார்கள்.

தாமரை: கொத்தர்களே! மங்களம், உண்டாகட்டும்! அப்பா, கொத்தர்களே! நம் செல்லாத்தா கோவில் முன், 60 அடி உயரத்தில், 60 படி வைத்து சதுரம் கட்ட வேண்டும் 15 நாட்களுக்குள் வேலை முடிந்து விடவேண்டும்!

கொத்த: ஆத்தா! அப்படியே, நல்லது.

தாமரை: அடி, குப்பி! ஒரு வள்ளம் முத்துக்கொண்டு வந்து, கொத்தர்களுக்கு வெற்றிலைபாக்கு வைத்துக்கொ

குப்பி. 'ஆத்தா! அப்படியே, கொடுத்து விட்டேன்.'

தாமரை. 'சரி, கொத்தர்களே! திங்கள் கிழமையிலிருந்து, வேலையை ஆரம்பம் செய்யுங்கள்.'

கொத். 'ஆத்தா! நல்லது!' என்று, திங்கள் கிழமை வேலையை ஆரம்பித்தார்கள்.'

பாட்டு,,

"இந்தப்பிரகாரம் இனிப்பிரகாரம்
நடக்குதுபார் தாமரையின் அதிகாரம்
அப்படியே நல்லதென்று இனி நல்லதென்று
அன்புடனே நடக்குதுபார்
அங்கு நடக்குதுபார்"

அன்னக்கொடித்தாமரை அரிவள்ளதேவி.
'மண்பிடித்துப்போட்ட மாயவனே!
உருப்பிடித்துப்போட்ட உடையாளி! தங்கள் கிருபையில், 5. நாளைக்குள் 60. அடி சுவரத்தை, சீக்கிரம் முடித்துக்கொடுக்க வேண்டும் காஞ்சிநாதா!' இதைமாயவர் பார்த்து, 'அடி சண்டாளி! புருஷன் சொல் கேளாமல் போய், அவமானப்பட்டு வந்து, இப்போது உயிரை மாய்க்கத் துணிந்து விட்டாளே!' என்று மாயவர் வந்து, ஒருவருக்கும் தெரியாமல், ஆயிரம் கொத்தரும் ஆயிரம் கல் வைத்தல், மாயவர், அந்தரமாக ஆயிரம் கல் எடுத்து வைத்தார். இப்படியாக சுவர வேலை நடந்து கொண்டு இருக்கும் போது, மறுநாள் குன்னுடையா ராஜன், செல்லாத்தா கோவிலுக்கு போய் பூஜை முடித்துக்கொண்டு வரும்போது, கொத்தரிடம் வந்து பார்க்கும் போது.

கொத்தூர்கள் அரசனைக்கண்டு நமஸ்காரம் செய்தார்கள்.

அரசர்: அப்பா, கொத்தூர்களே! மங்களம், உண்டாகட்டும்! இந்தக்கட்டிடம், யார், கட்டச் சொன்னது?

கொத்தூர்: சாமி! நம், ஆத்தா அவர்கள்தான், 60 அடி சதுரம் என்று கட்டச் சொன்னார்கள்.

அரசர்: ஓகோ! அப்படியா, நல்லது என்று வீட்டுக்குச் சென்றார்.

பாட்டு,,

"அப்படியே நல்லதென்று இனி
அன்புடனே நடக்குதுபார்
நாளொரு நாள் பொழுதொரு நாள்
நடக்குதுபார் நல்பருவம்
மாயருடகிருபையாலே
வளருது பார் சதுரமது"

(இந்தப்பிரகாரம் பொன்னிவளநாட்டில் சதுர வேலை நடந்தது)

தாமரை: அடே, பாரிவில்லு சேவகா! சீக்கிரம் தூங்க வளநாடு சென்று, ஆசாரிகளைக் கூட்டி வாருங்கள்.

சேவகர்: ஆத்தா! நல்லது. என்று சேவகன் புறப்பட்டான்.

பாட்டு,,

"பாரிவில்லு என்னாத்தா சேவகனும்
வெள்ளிவெடி என்சாமி ஆளுகளும்
பொன்னிவள என்னாத்தா நாடு விட்டு
தூங்கவளநாடு என்சாமி நாடுதேடி
வருகிறாரே என்சாமி சேவகரும்"

சேவகர் தூங்கவளநாடு வந்து, ஆசாரிகளை கூப்பிட்டு 'பொன்னிவளநாட்டு பெரிய வீட்டுஆத்தா, உங்களை கூட்டிவரச் சொன்னார்கள் என்றார்கள்

ஆசாரி. 'நல்லது! இதோ வருகிறோம்' என்று சாமான்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.
ஆசாரிகள் பொன்னிவளநாடு வந்து, தாமரையை கண்டு, அட்டம் பணிந்து அடிமை செய்தார்.

தாமரை. 'அப்பா, ஆசாரிகளே! மங்களம், உண்டாகட்டும்! ஆசாரிகளே! செல்லாத்தா கோவில் முன், 60 அடி சதுரம் கட்டுகிறீர்கள், அதை சுற்றிலும், வசிகளையும், படிகளையும் செய்து நாட்டி விடுங்கள்'

ஆசாரி. 'ஆத்தா! அப்படியே நல்லது' என்று வேலையை ஆரம்பித்து இரண்டு நாளில் வேலையை முடித்தார்கள்.
பின், ஆசாரிகள் விடை பெற்று தங்கவளநாடு சென்ற பின், 15 நாட்களுக்குள், சதுர வேலையை முடித்துக்கொத்தர்கள் அரண்மனைக்கு வந்தார்கள், தாமரையைக் கண்டு, 'ஆத்தா! சதுர வேலை முடிந்து விட்டது, நாங்கள் போய் வருகிறோம்' என்றார்கள்.

தாமரை. 'சரி, நல்லது! போய் வாருங்கள்' கொத்தர்கள் விடைபெற்று ஊருக்குச் சென்ற பின்.

கு. ராஜ. அடி, குப்பி! இங்கே வா, நம் செல்லாத்தாள் கோவில் முன், தாமரை 60 அடிச் சதுரம் கட்டச் சொன்னது என்று உனக்குத் தெரியுமா?

குப்பி. 'சாமி! ஆத்தா ஊரிலிருந்து வந்ததும், தாங்கள் என் வார்த்தையை மீறிப் போய் அவமானப்பட்டு வந்தாய், இனி என் முகத்தில் விழிக்கக்கூடாது, அரண்மனையிலும் இருக்கக்கூடாது என்று தாங்கள் சண்டைப்பிடித்தீர்களாம். கணவர், இந்தமாதிரி சொல்லிவிட்டார், இனி நாம் உயிரை வைத்திருக்கக்கூடாது என்று, 60 அடி சதுரம் கட்டச் சொல்லி, அதன்

மேல் ஏறி, கீழே விழுந்து உயிரை விடுவதற்கு கட்டச் சொல்லி இருக்கிறீர்கள்.)

கு.ராஜு: 'சரி, நல்லது!' என்று பஞ்சணைக்குச் சென்றார்.

(அன்னக் கொடித் தாமரை அறிவுள்ள தேவி)
திங்கள் கிழமை சிவன் பிறந்த நாள், வெள்ளி உதிக்கு முன், வெண்கோழி கூவுமுன் எழுந்து செல்லாத்தா கோவிலுக்குச் சென்று, அருபூஜை குருபூஜை 58 லிங்கம் பூஜையும் சரியாக முடித்து விட்டு சதுரத்தை ஏழுதரம் சுற்றி வந்து, சதுரத்தின் படி வாசலில் நின்று 'அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகா/ சங்கே சக்கரா, வைகுந்த வாசகா/ ஆபத்பாந்தவா அநாத ரக்ஷகா! பரந்தாமா! நான் 60 அடி சதுரத்தின் மேல் ஏறி, கீழே சாய்ந்தாலும் என் கால் வேறு, கை வேறு, சிரசு வேறாய் போகவேணும் காந்தி நாதா!' என்று.)

பாட்டு)

"ஒன்றாம் படி பத்தினி ஏறியல்லோ
இரண்டாம் படி பத்தினி போய் நின்றாள்
இரண்டாம் படி தாமரை விட்டுமல்லோ
நான்காம் படி அன்னக்கொடி போய் நின்றாள்
நான்காம் படி பத்தினி விட்டுமல்லோ
ஆறாம் படி அன்னக்கொடி போய் நின்றாள்
ஆறும் படி தாமரை தாண்டியல்லோ
எட்டாம் படி பத்தினி போய் நின்றாள்
எட்டாம் படி பத்தினி தாண்டியல்லோ
பத்தாம் படி தாமரை போய் நின்றாள்"

இப்படியாக 60 படியும் தாண்டி, சதுரத்தின் மேல் ஏறிப்போய் பார்க்கும் போது, ஆகாயமும் பூமியும் ஒன்றாக கண்ணுக்குத் தெரிந்தது.

தாமரை. 'பாலமலைஜோசியா பரமகுருதன்நேசி!
ஏழைப்பரதேசி எம்பெருமாள் மாயவனே!
நான் கீழே விழுந்தும் என் உயிர் போய் விட
வேண்டும் காந்தி நாதா!'

இப்படி இருக்கும் போது பால் கடலில் மாயவர்
பார்த்து 'தாமரை, உயிரை மாய்க்க சதுரத்தில்
ஏறிவிட்டாள், நாம் போய்க் காப்பாற்ற வேண்டும்'
என்று, கருடவாகனம் ஏறி கண் மூடி விழிப்பதற்குள்
பொன்னி வளநாடு வந்து சேர்ந்தார். மாயவர் கொஞ்ச
தூரத்தில் ஜலமீது பார்சமாக நின்று.

பாட்டு,,

மாயவர். "இங்கே வாம்மா இங்கே வாம்மா தாமரை.
மைந்தன் வரம் மைந்தன் வரம் வாங்கித்தாரேன்
குழந்தையில்லா அங்கு பெண்களுக்கு
குழந்தை வரம் நான் தருவேன்"

வசனம்.
'தாமரை! நீ வம்பில் ஏறி விழுந்து சாக வேண்
டாம், கீழே இறங்கி வா.'

தாமரை. 'ஆகா! யாரோ, குழந்தை வரம் வாங்கித்தரு
வதாக சொல்கிறீர்கள், போய்ப் பார்ப்போம்'
என்று கீழே இறங்கி ஓடி வந்து பார்க்
கும் போது, ஒருவரையும் காணவில்லை, ஐயோ!
யாரோ, கூப்பிட்டார்கள் ஒருவரையும் காண
வில்லை, பேயோ, பிசாசோ, தெரிய வில்லை'
என்று, மறுபடியும் சதுரத்தின் மேல் ஏறி கீழே
சாயும் முன்

மாயவர் கொண்றங்கி மேலயில் போய் நின்று
மறுபடியும் கூப்பிட்டார்.

பாட்டு,,

மாயவர். "இறங்கி வாம்மா அம்மா தாமரை.
நான் மைந்தன் வரம் வாங்கித்தாரேன்
குழந்தையில்லா அங்கு பெண்களுக்கு
குழந்தைவரம் குழந்தைவரம் நான்தருவேன்"

தாமரை. 'ஆகா/மறுபடியும் யாரோ, இந்து மேலையில் கூப்பிடுகிறீர்கள் என்று தாமரை இறங்கி வந்து ஓடிப்பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை, யாரோ தெரியவில்லை, இந்துமாதிரி செய்கிறீர்கள் வந்து பார்த்தால் ஒருவரையும் காணவில்லை! என்று, மறுபடியும் சதுரத்தில் ஏறிசாயும் போது மாயவர் கல்லாவரத்து மேலையில் போய் நின்று

பாட்டு,,

"இங்கு வாம்மா தாமரையா தாமரையா
மைந்தன்வரம் மைந்தன் வரம் வாங்கித்தாரேன்
பிள்ளையில்லா பிள்ளையில்லா பெண்களுக்கு
பிள்ளைவரம் நானுனக்கு வாங்கித்தாரேன்"

தாமரை. 'ஆகா/யாரோ, மறுபடியும் கல்லாவரத்து மேலையில் நின்று கூப்பிடுகிறார்! என்று கீழே இறங்கி வந்து ஓடிப்பார்க்கும்போது, ஒருவரையும் காணவில்லை, என்று மறுபடியும் சதுரத்தில் ஏறிசாயும் போது, மாயவர் கொடிக்கால் மேலையில் போய்நின்று கூப்பிட்டார்,

பாட்டு,,

"இறங்கிவாம்மா அம்மா தாமரையா
மைந்தன் வரம் நானுனக்கு வாங்கித்தாரேன்
குழந்தையில்லா அம்மா பெண்களுக்கு
குழந்தைவரம் இங்கு வாங்கித்தாரேன்
மாயர் நல்லோ மாயர் பெருமானும்.
மாயமாக அங்கு கூப்பிடுகிறார்."